
الله





# Jamiyya

**Souvenir - 2004**

**Regional Da'wa Muaskar**

جمعية الطلبة الإسلامية السري لانكية

SRI LANKA ISLAMIC STUDENTS' MOVEMENT

ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம்

# பிராந்திய த.:.வா முஅஸ்கர்
# ප්‍රාදේශීය මුඅස්කර් (යෞවන සමුළුව)
# Regional Muasker (Youth Convention)

# 2004

## கருப்பொருள்



# அல்லாஹ்

## அவனுக்காகவே வாழ்வோம்

## இரு உலகிலும் ஜெயிப்போம்

**September 11** சனிக்கிழமை
**மேற்குப்பிராந்தியம்**
**மாதம்பை**

Western Region - Madampe
Al Misbah Muslim
Maha Vidiyalayam

**September 19** ஞாயிற்றுக்கிழமை
**மத்தியபிராந்தியம்**
**மாவனல்லை**

Central Region - Mawanella
Zahira National School

**September 24** வெள்ளிக்கிழமை
**வடகிழக்குப்பிராந்தியம்**
**கிண்ணியா**

North East Region - Kinniya
Central College

**September 28** செவ்வாய்க்கிழமை
**கிழக்குப்பிராந்தியம்**
**சம்மாந்துறை**

Eastern Region - Sammanthurai
Muslim Madiya Maha Vidiyalam

بسم الله الرحمن الرحيم

واعتصموا بحبل الله جميعا

1990

# Jamiyya

# சிந்தனைக்கு...

இஸ்லாமிய நம்பிக்கையைப்போல், இஸ்லாமிய ஒழுக்கமும் நமது வாழ்விற்கான அடிப்படை என்ற உண்மையை நமது மாணவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். நம்பிக்கைக்கும், ஒழுக்கத்திற்கும் ஆழ்ந்த சம்பந்தம் உண்டு. நகமும் சதையும்போல் இவை ஒன்றியவை. இஸ்லாமே நம்மிடமிருந்து சில குறிப்பிட்ட ஒழுக்கங்களின் பேணுதலை நிர்பந்திக்கிறது. நமது கல்விக் கூடங்களில் நீண்டகாலமாக இஸ்லாமிய ஒழுக்க போதனைகள் தீவிர அலட்சியத்திற்குள் ளாகியுள்ளன. இதுமட்டுமின்றி, இஸ்லாமிய நியதி, இஸ்லாமிய கோட்பாடு, இஸ்லாமிய ஒழுக்கத்திற்கு முற்றிலும் முரணான ஒரு கலாச்சாரமே வளர்க்கப்பட்டு வந்துள்ளது. எந்த ஒழுக்க அடிப்படையின் மீது ஒரு மேற்கத்திய சமூகம் ஓங்கி வளரமுடியுமோ, அதே அடிப்படையின் மீது ஒருக்காலும் நாமும் ஓங்கி வளர்ந்துவிட முடியாது என்பதை நாம் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். இஸ்லாம் நமக்களிக்கும் ஒழுக்க அடிப்படைகளின் மீதுதான், நமது வளர்ச்சி தழைத்தோங்க முடியும். மேலைநாட்டு நபர் ஒருவர், குடித்து, நடனமாடி, விபச்சாரம் செய்தபின்பும், தம் நாட்டிற்காக தியாகம் புரிய ஒரு தடையுமில்லை. ஏனெனில் அவருடைய ஒழுக்கம், தார்மீக தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. அவருடைய இழிசெயல்கள் அத்தத்துவத்திற்கு முரண்பட்டவையல்ல. ஆனால், அல்லாஹ்வும் அவனுடைய திருத்தூதரும் (ஸல்) இக்கேளிக்கைகளையெல்லாம் கட்டாயமாகத்தடை (ஹராம்) செய்திருக்கிறார்கள் என்று நன்கு அறிந்துள்ள ஒரு முஸ்லிம் இவற்றில் ஈடுபடுவதானால் இஸ்லாத்தின் அடிப்படை கோட்பாடுகளைப் புறக்கணித்துவிட்டுத்தான் இந்த அந்நிய கலாச்சாரத்தையும் வாழ்க்கை முறையையும் ஏற்க முடியும். இந்த இழிசெயல்களைப் புரியும் ஒரு மேலைநாட்டவன், தன்னுடைய ஒழுக்க விதிகளை மீறுவதில்லை. ஆனால் இந்த பண்பாட்டை நாம் ஏற்கும்போது எந்த நியதிகளின் அடிப்படைமீது நமது ஒழுக்கம் நிற்கிறதோ அதனை முழுவதுமாக தகர்த்தெறிந்துவிடுகிறோம். மதுவை ஒரு முஸ்லிம் அருந்துவதிலும் ஒரு மேற்கத்தியன் அருந்துவிலும் பெருத்த வேறுபாடு உள்ளது. இருப்பினும், மனிதன் என்ற முறையில் மது அருந்துவதினால் உடலுக்கும் உள்ளத்திற்கும் ஏற்படக்கூடிய தீமைகள் ஒரு முஸ்லிமுக்கும் ஒரு முஸ்லிம் அல்லாதவனுக்கும் ஒன்றாகவே இருக்கும். ஆனால் ஒரு நாத்திகனின் நெறியில் மதுவிலக்கப்பட்டதல்ல. ஆகவே அவன் அதைக்குடித்தால் ஒரு நச்சுப்பொருளை உபயோகிக்கிறானே தவிர, அது அவனை தன் நெறியை உதறித்தள்ளுகிறவனாககுவதில்லை. ஆனால் ஒரு முஸ்லிமின் உள்ளத்தில் அல்லாஹ்வையும், நபி (ஸல்)யையும் பொறுத்தவரை துரோக சிந்தனையும், மறுமையை பொறுத்தவரை அலட்சியமும் வளராதவரை அவன் இந்த விலக்கப்பட்ட (ஹராமான) செயலை ஆமோதிக்கமாட்டான். இதன்பிறகு, ஒரு விதியின் முறிவோடு விஷயம் நின்றுவிடுவதில்லை. தொடர்ந்து எல்லா விதிகளும் முறிக்கப்படுகின்றன. ஒழுக்கத்தின் எல்லா நிபந்தனைகளும் களைந்தெறியப்படுகின்றன. இத்தகைய மனிதனுக்கு நாசமாக்காமல் பாதுகாக்கப்பட வேண்டிய அளவிற்கு எந்த ஒரு புனிதமும் இருக்க முடியாது.

❋

மௌலானா மௌதூதி (ரஹ்)

# சமர்ப்பணம்

இவ்வுலகில்

இஸ்லாம்

வாழ்வதற்காய்

அர்ப்பணங்கள்

மேற்கொண்ட

அனைவருக்கும்

இது சமர்ப்பணம்

# Regional Da'wah Muasker 2004
# Souvenir

## Theme

### Live for ALLAH
### be Victorious in this world
### and hereafter

SEPTEMBER-2004

| 11 | 19 | 24 | 28 |
|---|---|---|---|
| Western Region | Central Region | North-East Region | Eastern Region |


***Editorial Board***

| | |
|---|---|
| Chief Editor | **Br.H.Ajmal** |
| Editor in Charge | **Br.A.Azmin** |
| Co. Editors | **Br.M.B.M.Rajai** |
| | **Br.A.W.M.Fazil** |
| | **Br.M.S.M.Rizvi** |
| Graphics | **Br.M.A.Nawshad** |



**77, DEMATAGODA ROAD, COLOMBO-09 SRI LANKA.**
**Phone : 0094 11 2692760/ 2687091 Fax 0094 11 2686030**
**E.mail : jamiyya@gmail.com**

# ஆசிரியரிடமிருந்து

ஜம்இய்யத்தின் ஒரு இனிய முயற்சியுடன் உங்களை சந்திக்கின்றோம்-
இளைஞர்கள் - மாணவர்கள் ஓரணியாய் நின்று சீராய் அமைத்த ஜம்இய்யா
24 வருடங்களாக கம்பீரமாய் எழுந்து நிற்கின்றது-
அல்ஹம்துலில்லாஹ்-
ஜம்இய்யாவின் வருடாந்த பிராந்திய முஅஸ்கர்களை முன்னிட்டு
வெளியிடப்படும் நினைவு மலரில்
சில சிந்தனைகளை உங்களுடன் பகிர்ந்துகொள்கின்றோம்.
ஒவ்வொரு மனிதனது உள்ளமும் ஏதோ ஒரு எதிர்பார்ப்புடன்
உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றது-
ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பணிகள் - சிந்தனைகள்-
மனிதன் தன் சிந்தனைக்கு அமைய வாழ்வை வடிவமைக்கிறான்.
பணத்தை வணங்கு - தொழிலே தெய்வம் -
பசித்தால் புசி - மற்றவனைச் சுரண்டு -
மோகம் வந்தால் பிணத்தின் மீதாவது படு -
கோபம் வந்தால் பூவாயினும் சுட்டுத்தள்ளு -
எப்படியாவது ஏமாற்று - எதையாவது அபகரி -
இனிமையாய் பேசியபடியே கழுத்தின் மீது கத்தி வை -
நண்பனையும் கொல்லத்தயங்காதே -
தாயை மிதி - பாசம் தேவையில்லை -
தந்தையை வெளியேற்று - அன்பு அர்த்தமில்லை -
உயிர் அடங்கும்வரை அனுபவி -
எதையாவது பிரசவி - எப்படியாவது வளரட்டும் விட்டுவிடு -
இவைதான் மனிதம் செத்துப்போன மயானத்தின் வாழ்க்கை.
அமைதி தொலைந்துபோனது -
நிம்மதியும் அற்றுப்போனது -
மனிதன் தன்னைத்தானே அழித்துக் கொண்டான் -
இப்படியொரு சூழலில் -
மனித சிந்தனை தோற்றுப்போகின்றது.

அல்லாஹ் - அவனுக்காவே வாழ்வோம்
இரு உலகிலும் ஜெயிப்போம் என்றொரு அழைப்பு கேட்கின்றது.
அல்லாஹ் - அவனுக்காய் வாழ்வோம்
நிம்மதி நிச்சயம் நிர்க்கதி கிடையவே கிடையாது -
தன்னம்பிக்கை தானாய் வரும் -
அபிவிருத்தி - சுபீட்சம் - வெற்றி எல்லமேயுண்டு.
நீ இவ்வுலகிலும் ஜெயிப்பாய், மறு உலகிலும் ஜெயிப்பாய்
அல்லாஹ்வின் மீது ஆணையாய் - இது நடக்கும்.
ஜம்இய்யத்தின் அழைப்பிது.
சத்தியப் பாதையில் இலட்சியம் காண்போம்.

வாழ்த்துக்களுடன் விடைபெறுகின்றோம்.

இதழாசிரியர்
அ.அஸ்மின்
10-09-2004


1ம், 3ம் வாரங்களில்
நமது மக்களின்....
நமது அரசியலின்....
நமது கலாசாரத்தின்....
நமது பண்பாட்டின்....
எழுச்சிக் குரல்!
எங்கள் தேசம்
வாங்கிப் படிக்கத் தவறாதீர்கள்

# எமது நாஸிமிடமிருந்து

அல்லாஹ் அவனுக்காகவே வாழ்வோம், இரு உலகிலும் ஜெயிப்போம் என்ற கருப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ்வருடத்திற்கான ஜம்இய்யாவின் பிராந்திய முஅஸ்கர்களின் நினைவாக வெளியிடப்படும் இந்நினைவு மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இறை தீனை நிலைநாட்டுகின்ற பணியில் ஜம்இய்யா, இம்மண்ணில் கடந்த 24 வருடங்களாக கச்சிதமாக வளர்ச்சிபெற்று வந்ததில் காத்திரமான பங்களிப்புக்களைச்செய்த எம் மூத்த சகோதரர்களை இத்தருணத்தில் நினைவு கூறுகின்றோம். இவ்விருட்சத்தின் வளர்ச்சிக்கும், உறுதிக்கும் உரமாய் அமைந்தவர்கள் அவர்கள்தான். வல்ல நாயன் அம்மனிதர்களை பொருந்திக்கொள்வானாக.

இளைஞர்கள் ஓர் சமூகத்தின் கண்ணாடி, நாளைய அச்சமூகத்தின் இருப்பையும், அழிவினையும் தீர்மானிப்பவர்கள். பொங்கி எழும் உணர்ச்சிகளோடு இருக்கும் இள ரத்தம் பாய்ச்சப்படும் கால்வாயும் அடையவேண்டிய இறுதி இடமும் சரியாக வழிகாட்டப்பட்டால் அச்சமூகம் மறுமலர்ச்சி காணும்.

இன்று எமது நாட்டின் முஸ்லிம் இளைஞர்களின் நிலையைப்பொறுத்தவரையில் சமூக விவகாரங்கள், கல்வித்துறையில், வாழ்வின் இன்னோரன்ன விவகாரங்களில் அவர்களின் ஈடுபாடு போதுமான திருப்தி தருவதாக இல்லை. அவர்கள் நாகரிகத்தின் முதிர்ச்சி என தம்மை அடையாளம் காட்டிக்கொள்ள முயற்சிக்கும் மேற்கின் நிர்வாணக் கலாசாரத்தின் காவிகளாக மாறிக்கொண்டிருக்கின்றனர்.

அல்ஹம்துலில்லாஹ், இவ்வியக்கத்தின் கடந்த கால வரலாற்றுப்பாதையில் சிறந்த முன்னுதாரணங்களைக் காண்கிறோம். இன்று சமூகத்தின் பல தளங்களிலும் இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக தமது ஆற்றல்களால் முழுமையாக பங்களிப்பு செய்துவருகின்றார்கள்.

இளைஞர்கள் தம் வாழ்வினை இஸ்லாத்தின் அடிப்படையில் அமைத்துக்கொள்ள இவ்வியக்கம் அழைப்புவிடுக்கிறது. இம்முஅஸ்கரின் கருப்பொருள் காலத்தின் தேவையுணர்ந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இம்முஅஸ்கரின் மூலம் சிறந்த விளைவுகளை அல்லாஹ் தஆலா ஏற்படுத்தித்தந்தருள் புரிவானாக.

இஸ்லாமிய ஊழியன்

**எச். அஜ்மல்** - நாஸிம் (தலைவர்)

ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம்

# தகவல் தொழில்நுட்பத்திற்கான இஸ்லாமிய நிறுவனம் (IIIT) வழங்கும் கணணிப் பயிற்சி நெறிகள்...

ஏன் நீங்கள் IIIT ஐத் தெரிவுசெய்ய வேண்டும்?

- உணவு தங்குமிடம் இலவசம்.
- பாதுகாப்பான இஸ்லாமிய சூழல்.
- நவீன கணணி ஆய்வு கூடம்.
- குறைந்த கட்டணம், நிறைந்த பயன்.
- IT கற்கை நெறிகளுக்கான உயர்கல்வி வழிகாட்டல்.

## CERTIFICATE IN COMPUTER STUDIES CCS

**பெண்களுக்கான பயிற்சி நெறி**

பாதுகாப்பான தங்குமிடவசதி வசதிகளுடனான 10 நாள் பயிற்சி நெறி

- Introduction to Information Technology
- Operating System (Windows XP)
- Microsoft Word XP
- Microsoft PowerPoint XP
- Microsoft Excel XP
- Internet & E-mail
- English for Information

Course Fee 4000/-

## DIPLOMA IN COMPUTER STUDIES (DCS)

Course Contents

- Introduction to Information Technology
- English for Information Technology
- Operating System (Windows XP)
- Microsoft Word XP
- Microsoft PowerPoint XP
- Microsoft Excel XP
- Microsoft Access XP
- Introduction to Visual Basic
- Hardware Fundamentals
- Internet & E-mail

Course Fee 7250/-

பாதுகாப்பான தங்குமிடவசதி வசதிகளுடனான 10 நாள் பயிற்சி நெறி

## DIPLOMA IN DESKTOP PUBLISHING (DTP)

Course Contents

- Adobe Page Maker 7.0
- Adobe Photoshop 7.0
- CoreDraw 11
- Image Scanning

Course Fee 3500/-

## DIPLOMA IN HARDWARE ENGINEERING WITH NETWORKING

Learn to assemble your own PC, with troubleshooting and maintenance techniques.

- PC Configuration
- Hand on practice in assembling a PC
- Formatting and Partitioning a Hard Disk
- Windows 98 & XP installation & configuration
- Software installation
- Troubleshooting & Hardware Maintenance
- Peer to Peer Networking

Course Fee 3000/-

5 நாட்கள் முழு நேரம்

We Provide Excellent IT Education for Youth. Come and Feel the Difference

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்:

**Islamic Institute of Information Technology**

Old Town-Madampe Tel: 032-2247134, 0777-880472

Fax: 032-2247134 E-Mail: iiit@sltnet.lk

*Come and feel the difference*

ACCREDITED NEICT TRAINER

National Diploma in Applied Computing

கௌரவ அமீர் அவர்களின்

# ஆசிச்செய்தி

ஜம்இய்யாவின் 2004 முஅஸ்கர்களை முன்னிட்டு வெளியிடப்படும் நினைவு மலருக்கு
நல்வாழ்த்துக்ளை தெரிவித்த வண்ணம் இளைஞருக்கு ஒரு வார்த்தை....

இளைய சமுதாயம் ஒரு சமூகத்தின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம் என்ற வகையிலும் மனிதன் தாண்டிச் செல்லும் பருவங்களில் அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான ஆனால் பொறுப்பு வாய்ந்த பருவம் என்ற வகையிலும் பிசைந்த மாவுருண்டை போல் எந்த வடிவத்துக்கும் விரைவில் வளைந்து கொடுக்கும் பருவம் என்ற வகையிலும்,

ஜம்ய்யா சுமந்திருக்கும் பொறுப்பு உன்னதமானது, பாரியது கட்டிளம் காளைப் பருவத்தை இஸ்லாத்தினால் பட்டைதீட்டும் ஜம்இய்யாவின் பாசறைக்குள் சென்று வெளிவருவோர் தங்களது இலட்சியத்தையும் பணியையும் நன்குணர்ந்தவர்களாகவும் தங்களது இளமைப்பருவத்தில் பெற்ற பயிற்ச்சிகளை இறுதி மூச்சு வரை வாழ்க்கையில் பேணி வருபவர்களாகவும் இகாமதுத்தீன் பணியில் முன்நின்றுழைக்கும் திறமைமிக்க ஊழியர்களாகவும் மிளிர வேண்டும் என் அல்லாஹ்வைப் பிரார்த்திக்கிறேன்.

உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்
அமீர் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி

*With Best Compliments from:*

مِنْهُمْ وَنَحْنُ لَهُۥ مُسْلِمُونَ ﴿٨٤﴾ وَمَن يَبْتَغِ غَيْرَ ٱلْإِسْلَٰمِ
دِينًا فَلَن يُقْبَلَ مِنْهُ وَهُوَ فِى ٱلْءَاخِرَةِ مِنَ ٱلْخَٰسِرِينَ ﴿٨٥﴾

இஸ்லாத்தையன்றி(வேறொரு) மார்க்கத்தை எவரேனும் விரும்பினால் நிச்சயமாக அவனிடமிருந்து (அது) அங்கீகரிக்கப்படமாட்டாது.மறுமையில், அவன் நஷ்டமடைந்தவனாகவே இருப்பான். (3:85)

ඉස්ලාමය හැර (වෙනත්) දහමක් අනුගමනය කරන්නෙකුවේදල ඔහු ගෙන් එය කිසිවිටක පිළිගත නොලැබෙග තවද ඔහු පරලොවදී පරාජිතයින්ගෙන් කෙනෙක්වේග

# இஸ்லாம்

# அதனை விளங்குவோம்
# அதன்படி செயல்படுவோம்
# அதன்பால் அழைப்போம்

# Hira
**Information Centre**

***P.O.Box 24, Dehiwala, Colombo, Sri Lanka.***

# ஆசிச்செய்தி

சகோதரர்

**ஆஸிம் அலவி** (ஜம்இய்யா ஆலோசகர்)

துடிப்பும் உத்வேகமும் மற்றும் சிறப்பான தலைமைத்துவ திறன்களும் கொண்ட ஓர் இளைஞர் சமூகத்தை கட்டியெழுப்புவதில் ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம் மிகச் சிறப்பான பங்களிப்பை வழங்கி வருகின்றது. கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு மேலான அதன் வரலாற்றை எடுத்து நோக்கும்போது இறையச்சமும் உன்னதமான ஒழுக்க விழுமியங்களும் உள்ள, நாட்டுக்கும் சமூகத்துக்கும் பிரயோசனமுள்ள பல தனிநபர்களை இவ்வியக்கம் ஈன்றுதந்துள்ளதை காணமுடியும்.

இன்று சர்வதேச மட்டங்களில் இஸ்லாம் பயங்கரவாதிகளின் மார்க்கமென சித்தரித்துக்காட்டப்படுவதை நாம் அறிவோம். முஹம்மத் (ஸல்) அவர்களது காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் பின்பற்றிய உருவில் இஸ்லாத்தை தற்காலத்தில பின்பற்ற முடியாது. இந்த நவீன காலத்துக்கு ஏற்றவாறு இஸ்லாம் மறுவியாக்கியானம் பண்ணப்பட வேண்டும் என்ற வேண்டுகோள் பல மட்டங்களிலும் விடுக்கப்படுகிறது. தமது சமூக, அரசியல், பொருளாதார, கல்வி, கலாச்சார விவகாரங்களிலிருந்து இஸ்லாத்தை ஒதுக்கிவைத்துவிட்டு நவகாலனித்துவ சக்திகளின் ஏகாதிபத்தியத்தை அங்கீகரித்து தலைகுனிந்து வாழும் முஸ்லிம் தலைவர்களையும் பிரமுகர்களையும் உதாரண புருஷர்களாகக் கொள்ளுமாறு முஸ்லிம் இளைஞர்கள் வற்புறுத்தப்பட்டுவருகின்றனர். சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் சவட்டிக்கொண்டு முஸ்லிம்களின் பெருமையாக போற்றப்படும் நகரங்களையும், புனிதஸ்தலங்களையும் ஆக்கிரமித்து தமது இராணுவ மேலாதிக்கத்தை நிறுவியிருப்பதன் மூலம் முஸ்லிம்களின் உள்ளங்களில் உளவியல்ரீதியான தைரியமிழப்பையும் கோழைத்தனத்தையும் விரக்தியையும் விதைப்பதற்கான முயற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

விதண்டாவாதமாக இஸ்லாத்தினதும் முஸ்லிம்களினதும் புனிதத்துவத்தை மாசுபடுத்தும் வகையில் காரியமாற்றுவதன் மூலம் முஸ்லிம் இளைஞர்களின் உணர்ச்சிகளைக் கிளறி ஆத்திரமூட்டச் செய்கிறார்கள்; எமது இளைஞர் ஆவேசங்கொண்டு வன்முறையில் இறங் வேண்டும் என்பதே அவர்களது எதிர்பார்ப்பு. இஸ்லாம் வன்முறையாளர்களினதும் பயங்கரவாதிகளினதும் புகலிடம் என்பதற்கான அத்தாட்சிகளைப் பெற்றுக்கொள்வதற்காகவே இவ்வாறு செய்கின்றார்கள்.

ஆனால் ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம் போன்ற சீரான சிந்தனைத் தெளிவும், முஹம்மத் (ஸல்) அவர்கள் காட்டித் தந்த அல்-வஸதிய்யா எனும் நடுநிலையான அனுகுமுறையும் கொண்ட உலகம் பூராகவுமுள்ள அமைப்புக்கள் இத்தகைய ஆத்திரமூட்டல்களால் அசைந்துகொடுக்காது தமது இலக்கை நோக்கி கண்ணுங்கருத்துமாக நடைபோட்டுக்கொண்டிருப்பது பாராட்டுக்குரியதே. வன்முறை மூலம் ஒரே இரவில் உலகத்தை புரட்டிவிடமுடியாது என்பதையும் அல்லாஹு தஆலா வகுத்துவைத்துள்ள இயற்கை விதிகளுக்கேற்பவே உலகில் மாற்றங்கள் நிகழ்கின்றன எனும் யாதார்த்தத்தையும் இவர்கள் புரிந்து செயற்படுகிறார்கள்.

அந்தவகையில் இப்போது ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இளைஞர் மாநாடுகள் இத்திசையில் திருப்புமுனைகளாக அமைய அல்லாஹ்வைப் பிரார்த்திக்கிறேன்.

# A Message from

**ZUBAIR AHMED GONDEL**

I am immensely pleased to know that SLISM is going to organize The Da'wah Muaskers. Spiritual Training of Workers serves as the backbone of an Islamic organization, which enables them to remain committed with their cause. Highly skilled workers are no doubt the real asset of any organization. The training camps like these prove to be very effective in mobilization of workers that helps in taking on the challenges. I pray that these Muaskers may prove a milestone towards the ultimate goal of Sri Lanka Islamic Students' Movement. Wassalam.

**Zubair Ahmed Gondel**

President Islami Jamiat talaba

Pakistan.

# ஆசிச்செய்தி

**கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி**
பணிப்பாளர் ஜாமிஆ நளீமிய்யா, பேருவளை

ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் பிராந்திய இளைஞர் மாநாடுகளை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள ஞாகார்த்த இதழுக்கு இந்த ஆசிச் செய்தியை அனுப்பி வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கமானது, கடந்த 24 ஆண்டுகளாக இளைஞர்கள் மத்தியில் சன்மார்க்க விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கோடு நடாத்தும் பிராந்திய இளைஞர் மாநாடுகள் மிக்க காத்திரமான பணியை ஆற்றி வருகின்றன. மிகப்பயனுள்ள தொனிப்பொருள்களில் ஒழுங்கு செய்யப்படும் இம் மாநாடுகள், இளைஞர்களுக்கு இஸ்லாத்தின் பல்வேறு துறைகள் பற்றி அறிவூட்டும் பணியையும், அவர்களை சரியான வகையில் நெறிப்படுத்தும் பணியையும் செய்து வருகின்றன.

இம் மகத்தான பணி எதிர்காலங்களில் மேலும் சிறப்புற்று விளங்க அல்லாஹ் அருள் புரிவானாக. இப்புனித முயற்சியில் அர்ப்பண சிந்தையுடன் ஈடுபாடு காட்டி உழைக்கும் அனைவருக்கும் அல்லாஹ்வின் அருள்வேண்டிப் பிராரத்திக்கின்றேன்.

01.09.2004

*With Best Compliments from:*

# MADINA HAJJ TRAVEL & TOURS

## *Airline Ticketing Agency*

இஸ்லாத்தின் ஐந்தாவதும் இறுதிக் கடமையுமான புனித ஹஜ்ஜை நிறைவேற்றச் செல்லும் ஹஜ் யாத்திரிகர்களுக்காக கிழக்கில் முதன் முதல் உதயமான சிறந்த ஹஜ் முகவர் நிறுவனம்.

## மதீனா ஹஜ் டிரவல்ஸ் & டுவர்ஸ்

(முஸ்லிம் சமய கலாசார அமைச்சினால் அங்கீகாரம் பெற்ற ஹஜ் முகவர் நிலையம்)
எமது நிறுவனம் அல்லாஹ்வின் பேரருளால் கடந்த 20 ஆண்டு காலமாக புனித ஹஜ் கடமையை நிறைவேற்றும் பணியில் சிறப்பாகவும், திருப்தியாகவும் சேவையில் முன்னணி வகிக்கின்றது.
அல்லாஹ்வுக்காக அவனது இல்லத்திற்குச் சென்று (கஃபதுல்லாஹ்) ஹஜ்ஜை நிறைவேற்றி வர யார் சக்தி பெறுகின்றார்களோ அத்தகையவர்களின் மீது (ஹஜ்) கட்டாயக் கடமையாகும் (அல்குர்ஆன் 03:97)

Organizer:
**Moulavi A. Abooubaitha B.A (Madina)**
323, Maccamady Road, Maruthamunai - 32314
Tel: 067 229486, 011 2677160, Fax: 067 221039
Mobile: 0777 030519, 00966 58774386 (KSA) E-mail: almadina@sltnet.lk
**Agent for: Airline Ticketing**

*With Best Compliments from:*

# Islamic Audio Service

எமது வெளியீடுகளை
*Audio Cassette, Audio CD,*
*Video CD, DVD* க்களில்
பெற்றுக் கொள்ளலாம்.







**Note:** Cassette Recording
Cassette Duplicating
CD Writing
DVD Writing
VHS to VCD
VHS to DVD
Audio Recording
Filming (Video)
Audio Cassette to Audio CD
CD to Audio Cassette
are available

- ✓ கிராஅத்கள்
- ✓ கஸீதாக்கள்
- ✓ பயான்கள்
- ✓ கவிதைகள்
- ✓ சிறுவர் பாடல்கள்
- ✓ *Nursery Rhymes*
- ✓ *Islamic Softwares*





77, Dematagoda Road, Colombo - 00900,
Tel: 0094-11-2687091 Fax: 0094-11-2686030 Mob: 0094-77-7874984
E mail: islambks@slt.lk sljiias@yahoo.com



# A Message from

**Md. Selim Uddin**

With great pleasure I would like to take this opportunity to congratulate the leaderships and followers of the organization for their contributions to the ummah. It also gives us immense pleasure to know that Sri Lanka Islamic students' movement is going to publish a souvenir on the occasion of its auspicious regional muaskers (Public gathering) in the year 2004. We extend our whole hearted support and congratulations for the souvenir and pray to Allah (SWT) to bless of you to serve the cause of Islam and strengthen the Islamic movement.

Considering the present world we follow that in science and technology, the Western Civilization has made unprecedented advancement. But the West is morally bankrupt. And a bankrupt civilization has nothing much to offer to the world. Islam and Islam alone can save the West from its moral bankruptcy. A combination of Islamic values and Western material development is what the world needs today.

Unfortunately, Islam, today, is equated with terrorism and fanaticism. The truth is otherwise. The leaders and members of Srilanka Islamic students movement will work as the vanguards of Islam in Srilanka, will dispel the confusing and misgivings about Islam and spread its message transcending all barriers.


On this momentous occasion let us rekindle our faith and commitment to raise the ensign of Islam. This needs devotion, Sincerity and seriousness as students to equip ourselves and improve our qualities as well as our personal characters. May Allah help us in these endeavors. Ameen.

Wassalam and with best regards.

Yours brother

**Md. Selim Uddin**
Central President
Bangladesh Islami Chhatra Shibir

*With Best Compliments from:*



# SPEEDWAYS

## International (Pvt) Ltd.

Customs House, Clearing, Forwarding

& Transporting Agents

# LITA (Pvt) Ltd.

*Property Developers & Building Constructors*

116 - 3G, Second Floor,
Prince Street,
Colombo - 11.
Tel: 011 2436844, 2327035, 2432041.
Fax: 011 2334547
E-mail: speedways@vinet.lk

# ஜம்இய்யா

## உங்கள் பார்வைக்கு

**அறிமுகம்**

உலகில் தோன்றிய எல்லா மார்க்கங்களையும் மிகைக்கின்ற வல்லமையை அல்லாஹ் இஸ்லாத்திற்கு வழங்கியுள்ளான். இஸ்லாம் அதன் வரலாறு நெடுகிலும் கண்ணியமான வெற்றிகளைச் சுமந்துகொண்டு பயணிக்கிறது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்வைத்த சிந்தனைகள் அனைத்தும் அதனைப் பின்பற்றிய மனிதர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் மட்டுமன்றி மிகப்பக்குவமாக அடுத்த தலைமுறையினரை நோக்கி கடத்தப்பட்டிருப்பதை எம்மால் அவதானிக்க முடியும்.

இஸ்லாம் அதன் எதிரிகளின் சூழ்ச்சிகளால் ஆட்சிக்கட்டிலிருந்து அகற்றப்பட்டிருப்பினும் அதன் சிந்தனைகள் மனிதர்களிடையேயும் அவர்களது நடத்தைகளிடையேயும் ஆதிக்கம் செலுத்துவதைக் காண்கிறோம். இஸ்லாம் வாழ்வதற்காக இன்று எத்தனையோ மனிதர்கள் தமது உயிர்களை அர்ப்பணம் செய்கின்றனர். எத்தனையோ முயற்சிகள், தியாகங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அவைதான் இஸ்லாத்தை அதன் அசல் வடிவில் பசுமை குன்றாமல் வரலாறு நெடுகிலும் நகர்த்துகின்றன

ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கமும் அத்தகைய உன்னத பணியை இலங்கை வாழ் இளைஞர்கள், மாணவர்களிடையே மேற்கொள்வதற்கான பணியில் கடந்த 24 வருடங்களாக தன்னை ஈடுபடுத்திவருகின்றது.

1980 மே மாதம் 03ம் திகதி இஸ்லாத்தின் சிந்தனைகளால் கவரப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களது முயற்சியினால் ஜம்இய்யத்தின் முதல் விதை நாட்டப்பட்டது. அந்த மகத்தான அரும்பணி மாவனல்லை ஹிங்குள்ஓயா மஸ்ஜிதுல் ஹுதாவில் ஆரம்பமாய் அரங்கேற்றப்பட்டது. இறை சிந்தனைகளைச் சுமந்த மாணவர்கள், இளைஞர்கள் சிலர் அல்லாஹ்வின் மாளிகையில் ஜம்இய்யாவை ஆரம்பித்து வைக்கின்றார்கள்.

ஜம்இய்யா அன்று முதல் கடந்த 24 வருடங்களாக இலங்கையின் மாணவர்கள், இளைஞர்களின் உள்ளங்களில் வாழ்ந்துவருகின்றது. இந்த இஸ்லாமிய இயக்கம் அவர்களது நடத்தைகளிலும் சிந்தனைகளிலும் முன்னேற்றகரமான மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. பல்வேறு அறிஞர்கள், கல்விமான்கள், தொழிலதிபர்கள் இந்த இயக்கத்தின் அறுவடைகளாக இன்று சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் பிரகாசிக்கின்றனர்.

**எமது கொள்கை, இலட்சியம்**

ஜம்இய்யா "லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்" என்ற ஏகத்துவக் கொள்கையை அடிப்படையாகக்கொண்டுள்ளது. அல்லாஹ்வின் திருப்தியையும் சுவனத்தையும் எமது மறுமையின் இலட்சியமாகவும் உலகில் அல்லாஹ்வின் தீனை நிலைநாட்டுதல் எனும் "இகாமதுத்தீன்" பணியை இலக்காகவும் கொண்டு செயல்படும் ஜம்இய்யா அதனது பணியை பின்வருமாறு வரைவிலக்கணம் செய்கின்றது.

**எமது பணி**

*இலங்கை வாழ் அனைத்து மாணவர், இளைஞர்களுக்கும் இஸ்லாத்தின் சிந்தனையை அறிமுகப்படுத்தி, முஸ்லிம் மாணவர்கள், இளைஞர்களிடையே அதனை பரிச்சயப்படுத்துவதுடன் அவர்களுக்குத் தேவையான தனிமனித, குடும்ப, சமூக, நிறுவன ரீதியான இஸ்லாமிய வழிகாட்டுதல்களை வழங்கி, அவர்கள் இகாமதுத்தீன் பணிக்கு பங்களிப்புச் செய்ய வாய்ப்பளித்தல்.*

**எமது வழிமுறைகள்:**

மேற்படி பணியை செவ்வனே நிறைவு செய்வதற்கு ஜம்இய்யா நான்கு பிரதான வழிமுறைகளை கைக்கொள்கின்றது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இஸ்லாத்தை இவ்வுலகில் நிலைநாட்டிய போது கடைப்பிடித்த ஒழுங்குகளின் அடிப்படையிலும் இஸ்லாமிய அறிஞர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையிலும் மேற்படிவழிமுறைகளை ஜம்இய்யா தன்னுடையதும் வழிமுறைகளாக அடையாளப் படுத்துகின்றது.

**த.்.வா:**

''இஸ்லாத்தின் தூதை எத்திவைத்தலும் பரிச்சயப்படுத்தலும் த.்.வா எனும்போது நாம் இரண்டு பிரதான அணிகளை எதிர்கொள்கின்றோம். i) முஸ்லிம்கள் ii) முஸ்லிமல்லாதோர். முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவர்கள் இஸ்லாமிய சிந்தனையை கொள்கை அடிப்படையில் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் ஆனால் இஸ்லாத்துடன் பரிச்சயமற்றவர்களாக காணப்படுகின்றார்கள். இஸ்லாமிய சிந்தனை அவர்களுக்குப் பரிச்சயப்படுத்தப்படுதல் அவசியம் அது எமது பணி: அடுத்து முஸ்லிமல்லாதோர்க்கு இடையில் இஸ்லாமிய சிந்தனையை எத்திவைத்து அறிமுகப்படுத்துதல், த.்.வா என்பதனூடாக ஜம்இய்யா மேற்குறிப்பிட்ட இரண்டு அம்சங்களையும் தனது பணியாகக் கொண்டு மேற்கொள்கின்றது.

**தர்பிய்யா**

ஜம்இய்யாவின் அழைப்பை ஏற்று இஸ்லாத்தை அமுல் நடாத்துகின்ற பணியில் யார் தம்மை இணைத்துக் கொள்கின்றாரோ அவர்களுக்கு அறிவுடன் ஆன்மீக திறன்சார்ந்த துறைகளில் வழிகாட்டுதல்களை வழங்குதல் ஜம்இய்யாவின் கடப்பாடாகும். இஸ்லாமிய சிந்தனை பற்றிய தெளிவும் அதன் நடைமுறைகள் சார்ந்த விளக்கங்களும் ஒரு முஸ்லிமுக்கு அத்தியாவசியமானது அதேபோன்று ஆன்மீக பரிபக்குவநிலையும், துறைசார்ந்த திறன்களும் அவனுக்கு அத்தியவசியமாகின்றன. இத்தகைய வழிகாட்டுதல்களை ஜம்இய்யா வழங்குகின்றது.

**தன்பீஸ்**

ஒவ்வொரு முஸ்லிமும் அவன் விளங்கிக் கொண்ட இஸ்லாத்தை தன்னுடைய வாழ்விலும் புறச் சூழலிலும் அதனை நடைமுறைப்படுத்துவது அவசியமாகின்றது. அதற்கான வழிகாட்டுதல்களையும் வழிமுறைகளையும் ஜம்இய்யா ஏற்பாடு செய்கின்றது. தனிமனிதன், குடும்பம், நிறுவனம், சமூதாயம் போன்ற துறைகளில் ஜம்இய்யா தனது சக்திக்கேற்ற வகையில் வழிகாட்டுதல்களை வழங்குகின்றது.

**தன்ழீம்**

மேற்குறித்த மூன்று விடயங்களையும் ஒழுங்கு செய்கின்ற நிர்வாக முறைகளை ஜம்இய்யா தன்ழீம் என அடையாளம் செய்கின்றது. தேசிய நிர்வாகம் பிராந்திய நிர்வாகம்-கிளை நிர்வாகம் என இயக்கத்தின் நிர்வாகக் கட்டமைப்பு 3 பிரதான தொகுதிகளில் இயங்குகின்றது. அதேபோன்று 3 பிரதான அங்கத்துவ ஒழுங்கையும் ஜம்இய்யா கடைப்பிடிக்கின்றது. ருகூன்கள் -தேசிய அங்கத்துவம், இணையங்கத்தவர்கள் பிராந்திய அங்கத்துவம், ஊழியர்கள் - கிளை சார் அங்கத்துவம் என்பதுவே அம்மூன்று அங்கத்துவங்களுமாகும்.

**மத்திய சபை**

ஜம்இய்யாவின் அனைத்து ஒழுங்குகளையும் நிர்வகிக்கின்ற, அமுல்படுத்துகின்ற அமைப்பே மத்தியசபையாகும். 11 அங்கத்தவர்களைக் கொண்ட மத்தியசபையானது வருடாந்தம் ருகூன்களினால் தெரிவு செய்யப்படும். மத்தியசபையின் தலைவர் நாஸிம் என வழங்கப்படுவார். பொதுச் செயலாளர், நிதிச் செயலாளர் த.்வா செயலாளர் தர்பிய்யா செயலாளர் கல்வி விவகாரச் செயலாளர், சமூக விவகாரச் செயலாளர் மற்றும் 4 பிராந்திய நாஸிம்களை உள்ளடக்கியதாக மத்திய சபை செயற்படும்.

**பிராந்தியக் கட்டமைப்பு**

ஜம்இய்யா நான்கு பிராந்தியங்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

**மேற்குப்பிராந்தியம்**

கொழும்பு, களுத்துறை, கம்பஹா, புத்தளம், குருணாகல் போன்ற 5 மாவட்டங்களை உள்ளடக்கிய தொகுதியே மேற்குப்பிராந்தியம் என வரையறை செய்யப்படுகின்றது.

**மத்தியபிராந்தியம்**

கேகாலை, கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களை உள்ளடக்கியதாக மத்திய பிராந்தியம் அமைகின்றது.

**வடகிழக்குப்பிராந்தியம்**

திருகோணமலை, அநுராதபுரம், பொலநறுவை ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய தொகுதியே வழகிழக்குப் பிராந்தியம் என அழைக்கப்படுகின்றது.

**கிழக்குப் பிராந்தியம்**

மட்டகளப்பு, அம்பாறை மாவட்டங்களை உள்ளடக்கியதாக கிழக்குப் பிராந்தியம் அமைகின்றது.

ஒவ்வொரு பிராந்தியமும் 7 அங்கத்தவர்களைப் பிராந்திய சூராக்களினால் நிர்வகிக்கப்படுகின்றது. பிராந்திய சபைகளின் கீழ் உபபிராந்தியங்களும் கிளைகளும் செயற்படுகின்றன.

**எமது பிரதான செயற்பாடுகள்**

**த.்வா:**

நாம் ஆரம்பத்தில் நோக்கியதைப்போன்று இஸ்லாத்தை எத்திவைக்கின்ற, பரிச்சயப்படுத்துகின்ற பணியை அடிப்படையாகக் கொண்டு எமது த.்வா செயற்பாடுகள் அமைகின்றன.

தனிநபர் தொடர்புகள், பொதுநிகழ்ச்சிகள், ஒன்று கூடல்கள், மாநாடுகள், முஅஸ்கர்கள் என பல நிகழ்ச்சித்திட்டங்கள் த.்வாப்பகுதியினால் முன்னெடுக்கப்படுகின்றன.

**தர்பிய்யா**

அங்கத்தவர்களை அறிவு, ஆன்மீக, திறன்சார் துறைகளில் பயிற்றுவித்தலை தர்பிய்யா இலக்காகக் கொண்டு செயல்படுகின்றது. அங்கத்தவர் படைக்திட்டம் 5 நாள், 7 நாள் 30 நாள் பயிற்சிகள், பயிற்சி முகாம்கள், திறன் விடுத்தி சார் பயிற்சி நெறிகள், ரமழான் தர்பிய்யா, கியாமுல்லைல், போன்ற பல்வேறு செயற்திட்டங்கள் இப்பகுதியினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**கல்விவிவகாரம்**

கல்விவிவகாரப்பகுதியானது 3 பிரதான துணைப்பிரிவுகளைக் கொண்டுள்ளது 1) பாடசாலைப்பிரிவு 2) உயர்கல்வி, பல்கலைக்கழகப்பிரிவு 3) ஷரீஆப்பிரிவு, மேற்படி 3 துறைகளையும் சார்ந்த மாணவர்களை பயிற்றுவிப்பது அவர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்குவதை ஜம்இய்யா இப்பகுதியினூடாக மேற்கொள்கின்றது.

மாணவத்தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறி கல்வி வழிகாட்டல் நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள், போன்றன இப்பிரிவினூடாக மேற்கொள்ளப்படுகின்றன.

**சமூக விவகாரம்:**

ஜம்இய்யாவுடன் இணைந்து கொண்ட ஒவ்வொருவரும் தான் சார்ந்து நிற்கும் சமூகம் தொடர்பில் கவனம் செலுத்துவது அவசியமாகும். எனவே, அது சார்ந்த துறைகளில் அவர்களை வழிகாட்டுவதை சமூக விவகாரப்பகுதி மேற்கொள்கின்றது. சமூக ஒழுங்குகளைப் பேணுதல், சமூக நலன்கள் அபிவிருத்தி என்பவற்றில் கவனம் செலுத்துதல் சமூகம் சார்ந்த சிந்தனைகளை உருவாக்குதல் போன்றவிடயங்கள் இத்துறையினால் முன்னெடுக்கப்படுகின்றன.

**நிதி:**

இயக்க செயற்பாடுகளுக்கு அத்தியாவசியமான துறைகளுள் ஒன்றாக நிதிப் பிரிவும் அடையாளப்படுத்தப்படுகின்றது. ஜம்இய்யாவின் நிதிக்கட்டமைப்பானது அங்கத்தவர்களையும் ஆதரவாளர்களையும் மட்டுமே சார்ந்திருக்கின்றது. மிகவும் திட்டமிடப்பட்ட ஒழுங்கில் செயல்படுவதனால் நிதி விடயத்தை முமையாக கருத்திற் கொண்டு காத்திரமான முறைகளில் அதன் செயல்பாடுகள் ஒழுங்கமைக்கப்படுகின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களிள் ஜம்இய்யாவின் நிதித் தேவையை அதனது அங்கத்தவர்களே தாங்கிக் கொள்கின்றார்கள். வெளிநிதிநிறுவனங்களில் இருந்து நிதியைப் பெற்றுக்கொள்வதில் ஜம்இய்யா ஆவனத்துடன் மிகுந்த செயல்படுகின்றது என்பது, எச்சரிக்கையுடன் இவ்விடத்தில் குறிப்பிடப்படவேண்டியவிடயமாகும்.

**வெளியீடுகள்**

ஜம்இய்யா அவ்வப்போது வெளியீடுகளையும் பிரசுரங்களையும், வெளியிட்டுவருகின்றது. புத்தகங்கள், அன்றாட வாழ்வில் துஆக்கள், கையேடுகள், சுவரொட்டிகள் என ஜம்இய்யா, பல்வேறு வெளியீடுகளை மாணவர்கள், இளைஞர்களின் நலன்கருதி பிரசுரித்து வருகின்றது.

**வெளியுறவு**

ஜம்இய்யா சர்வதேச ரீதியாக இஸ்லாமிய மாணவர் இளைஞர் அமைப்புகளுடன் தொடர்புகளை பேணிவருகின்றது. SIO (Student Islamic Organization of India) இந்திய இஸ்லாமிய மாணவர் அமைப்பு (Islami-Jamiat Talaba) இஸ்லாமி ஜம்இய்யத்தலபா பாகிஸ்தான் (Chatra shibir) சத்ர ஷிபிர் - பங்களதேஷ் நேபாளத்தில் Uuwa sang - ABIM - மலேஷியாவின் ABIM. பர்மா அரகான் ITM போன்ற அமைப்புகளுடனும் தொடர்புகளைக் கொண்டுள்ள அதேவேளை, World Assembly of Muslim Youth (WAMY) AFMY-Asian Federation of Muslim Youth இனதும் International Islamic Federation of Student Organization (IIFSO) வினதும் பூரண அங்கத்துவத்தையும் (Active membership) ஜம்இய்யா பெற்றுக் கொண்டுள்ளது. அத்துடன் சர்வதேச ரீதியாக செயற்படும் இஸ்லாமிய அறிஞர்கள் பிரமுகர்களுடன் ஜம்இய்யா தொடர்புகளைப் பேணிவருகின்றது.

இத்தகைய பிரதான செயற்பாடுகளைப் பேணி வரும் ஜம்இய்யா அதனது தாய் இயக்கமான ஜமாஅதே இஸ்லாமியின் ஆலோசனைகளையும அறிவுரைகளையும் வழிகாட்டுதல்களையும் பெற்றுக் கொள்வதற்காக 4 பேர் கொண்ட ஆலோசனை சபையையும் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதும் இந்த இடத்தில் குறிப்பிடப்படவேண்டிய அம்சமாகும்.

நாம் அடிக்கடி கூறுவதைப்போன்று ஜம்இய்யா தனிமரமல்ல அது ஒரு தோப்பு. இங்கு ஏராளமான இளை தலைமுறையினர் அணிவகுத்து நிற்கின்றார்கள் இன்ஷா அல்லாஹ் இன்னும் பலர் இதில் அணிதிரள்வார்கள். இந்த இயக்கம் அது அடையாளப்படுத்தியுள்ள இலக்கை நோக்கி மிக வேகமாக மிகுந்த நிதானத்துடன் பயணிக்கின்றது இதனது ஒவ்வொரு நகர்வும் நாளைய விடியலுக்கு கட்டியம் கூறுகின்றது. இந்த அணியின் வெற்றி நாளைய வரலாறாகும் என்ற சுபசோபனத்துடன் விடைபெறுகின்றோம்.

# 2004 Central Council Detail

| | | |
|---|---|---|
| H.Ajmal Nazim | - | President |
| A.Azmin | - | Generl Secretary |
| M.H.M.Siyaul Hassen | - | Finance Secretary |
| M.Z.M.Nawzer | - | Da'wah Secretary |
| M.R.M.Rilwan | - | Tharbiyya Secretary |
| M.A.M.Arafath Akram | - | Academic Affairs Secretary |
| A.H.Rizwan Mohamed | - | Social Affairs Secretary |
| H.M.Saifullah | - | Western Region Nazim |
| M.H.M.Shamil | - | Central Region Nazim |
| M.S.M.Nihab | - | Eastern Region Nazim |
| M.S.M.Mahroof | - | North East Region Nazim |

# வரலாற்றுச் சுவடுகள்

## எமது தோற்றுவாய்

1979ம் ஆண்டு நவம்பர் 7, 8 ஆந் திகதிகளில் ஹம்பாந்தொட்டையில் இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் ஒரு தர்பியத் மகாநாடு நிகழ்ந்தது. அந்தத் தர்பியத் முடிவடைந்த பின்னர் மாத்தரைக் கடற்கரையில் புத்தளத்தைச் சேர்ந்த மாணவர்களையும் தர்கா நகர் மாணவர்களையும் ஒன்று சேர்த்து ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. சுமார் 20 பேர் வரை கலந்து கொண்ட அந்த நிகழ்ச்சியை பல பகுதி மாணவர்களையும் ஒன்றாக இணைத்து நடாத்தப்பட்ட முதல் நிகழ்ச்சியாகும். அந்த நிகழ்ச்சியில் சகோ. S.M. மன்சூர், சகோ. Y.I.M. ஹனீஸ், சகோ. A.C.M. நிஸார் (உலப்பனை) ஆகியோர் உரை நிகழ்த்தினர். இது தொடர்ந்து மறுநாள் மாத்தறை தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயத்திலும் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு மாணவர் அமைப்பு உருவாக வேண்டியதன் அவசியத்தை நன்கு அறிந்து கொண்டதனால் தர்கா நகர், பாணந்துரை, புத்தளம் ஆகிய பகுதிகளை ஒன்றிணைத்து ஒரு மாணவர் அமைப்பு உருவாக்குமாறு இலங்கை ஜமாஅதே இஸ்லாமி மஜ்லிஸே ஷுராவுக்கு சகோ. Y.I.M. ஹனீஸ், Y.I.M. மஹீஸ் ஆகியோர் கையொப்பம் இட்டு ஒரு கடிதத்தை அனுப்பி வைத்தனர்.

## அங்கீகாரம்

இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் மஜ்லிஸே ஷுரா இந்த க் கருத்தை ஏற்றுக்கொண்டது. அவ்வாறான அமைப்பு உருவாகுவது பற்றி ஆலோசிப்பதாகவும் அறிவித்தது. 1979 டிசம்பரில் மேற்படி விடயம் கலந்தாலோசிக்கப்பட இருந்தாலும் சில தவிர்க்கமுடியாத காரணங்களினால் அது பிற்போடப்பட்டது. பின்னர் மேற்படி விடயம் கலந்துறையாடலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஜம்இய்யா ஆரம்பிப்பதற்கான அங்கீகாரத்தை ஜமாஅத் 1980 களின் ஆரம்பப்பகுதிகளில் வழங்கயது.

## நாம் துளிர்த்தோம்!

ஹிஜ்ரி 1400 ஆண்டு ஜமாதுல் ஆகிர் மாதம் சனிக்கிழமை பதினேழாம் நாள் (1980-05-03) மாவனல்லை ஹிங்குளோயா ஜும்ஆப் பள்ளிவாசலில் இலங்கை இஸ்லாமிய சரித்திரத்திலேயே ஒரு பொன்னேடு திறக்கபட்டு அடையாளமிடப்பட்டது. சனிக்கிழமை காலை சுமார் 11.30 மணியளவில் ஆலோசனை சபையுடன் இணைந்து ஒரு கூட்டம் நடைபெற்றது. சுமார் 38 மாணவர்கள் வரை கலந்து கொண்ட அந்த சத்தியவேட்கை மிகுந்த ஒன்றுகூடலில் ஜம்இய்யதுத் தலபதில் இஸ்லாமிய்யா பற்றிய விளக்கமும் அளிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து நாம் துளிர்த்தோம்.

## முதல் மழை

ளுஹர் தொழுகையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் அமீர் அல்ஹாஜ் P.M.யூசுப் அவர்களின் ஆசியுரை வாசிக்கப்பட்டது.

"உலகெங்கும் இஸ்லாமிய மறுமலர்ச்சி மாணவர் மத்தியில் எழுச்சி பெற்று வருகின்ற இந்த காலகட்டத்தில் இவ்விலங்கைத்தீவில் உங்களது பணி மிகவும் மகத்தானது. வரலாற்றின் ஒவ்வொரு காலகட்டத்திலும் மாணவர்கள் - இளம்

வாலிபர்களே சத்திய தீனை தம் முதுகிற் சுமந்தவர்களாக அதற்காகப் போராடியுள்ளதைக் காணமுடியும். நீங்கள் ஏற்றுக் கொண்டுள்ள இலட்சியக் கொள்கை அழிந்து போகக் கூடிய மனிதனின் எண்ணச் சிருஷ்டியன்று. மனிதர்களால் உருவாக்கப்பட்ட கொள்கைகளுக்காக நீங்கள் பாடுபடுவது கூடாது. ஆனால் நீங்கள் என்றும் நிலைத்திருக்கக்கூடிய அல்லாஹ்வினால் வழங்கப்பட்ட இலட்சியக் கொள்கையை ஏற்றிருக்கின்றீர்கள் அதற்காகத்தான் நீங்கள் உழைக்கவும் வேணடும்."

## ● முதல் நாற்றுகள்

ஜம்இய்யத்துத் தலபதில் இஸ்லாமிய்யாவின் ஸ்தாபக உறுப்பினர்களாக பின்வருவோர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர். சகோ. Y.I.M.ஹனீஸ், சகோ. M.C.M.மஹீஸ், சகோ. J.M.நிவாஸ், சகோ. M.H.M.ஹஸ்ஸானி, சகோ. M.R.M.நபீல், சகோ. M.R.M.நௌபல், சகோ. M.I.நயீமுத்தீன், சகோ. A.M.நியாஸ், சகோ. M.S.சலாகுத்தீன், சகோ. M.A.M.பஸ்லி, சகோ. சபருல்லாதீன், சகோ. M.S.M.அமானுல்லாஹ், சகோ. A.L.M.மஸ்ஹீல்.

## ● முதல் நாஸிம்

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட ருகூன் அங்கத்தவர்களிடையே இரகசிய வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது. தேர்தல் அதிகாரிகளாக சகோதரர் யு.ர்.ஆ. அஸாத் (ஆசிரியர்) சகோதரர் ர்.ஆ. நியாஸ் ஆகியோர் கடமையாற்றினர். அத்தேர்தலிலே முதன் முதல் இலங்கை முஸ்லிம் மாணவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட தேர்தல் எனக்கொள்ள முடியும்.இதில் சகோதரர் ஆ.ஊ.ஆ. மஹீஸ் அவர்கள் தலைவராகவும் சகோதரர் லு.ஐ.ஆ. ஹனீஸ் அவர்கள் செயலாளராகவும் முதலில் தெரிவுசெய்யப்பட்டனர். பின்னர் சகோதரர் ஆ.ஊ.ஆ. மஹீஸ் தலைமைப்பொறுப்பை ஏற்க மறுக்கவே பின்னர் அங்கத்தவர்கள் ஒன்றுகூடி லு.ஐ.ஆ. ஹனீஸ் அவர்களே ஜம்இய்யாவின் முதல் நாஸிமாக செயற்பட்டார்.

## ● முதலாவதாக நடந்த ஊழியர் பயிற்சி முகாம்

